*3*

# "நன்கு தொடங்கப்பட்டது பாதி முடிந்ததாக உள்ளது"

தத்துவ ஞானியான அரிஸ்டாட்டில் என்பவர் (கி.மு. 384-322) "நன்கு தொடங்கப்பட்டது பாதி முடிந்ததாக உள்ளது" என்ற பொன்மொழியை எழுதினார்.[1] அந்த வார்த்தைகள் வாழ்வின் பணிப்பொறுப்புகள் பலவற்றைப் பொறுத்த மட்டில் உண்மையாய் உள்ளன; வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய படிப்பைப் பொறுத்த மட்டில் அவைகள் இருமடங்கு உண்மையாய் உள்ளன. ஏவுகணையொன்று செலுத்தப்படும்போது, அது புறப்படுகையில் ஏற்படும் ஒரு சில பாகைகள் பாதை விலக்கமானது, அது சென்று சேரும் இடத்திற்கு நூற்றுக்கணக்கான மைல்கள் வித்தியாசத்தை ஏற்படுத்தக் கூடும் என்று நான் கேள்விப்பட்டுள்ளேன். வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய உங்கள் படிப்பைச் சரியாகத் தொடங்குங்கள், அப்போது நீங்கள் உங்கள் இலக்கை அடைவீர்கள். நீங்கள் தவறான நிலைப்பாட்டில் இருந்து தொடங்கினால், விசித்திரமான யூகங்கள் சிலவற்றை அடைவீர்கள்.

இந்தப் பாடம், வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய நமது படிப்பில் நாம் மேற்கொள்ளவிருக்கும் அணுகுமுறை பற்றியதாக உள்ளது. இதைக்காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த பின்னணிப்பாடம் வேறு எதுவும் இல்லை. இந்தப் புத்தகத்தைப் பொறுத்தமட்டில் தனிநபர்கள் மேற்கொள்ளும் அணுகுமுறையானது, ஏறக்குறைய இப்புத்தகத்தின் ஒவ்வொரு விபரத்தையும் அவர் விளக்கம் அளிக்கும் முறையைப் பாதிக்கிறது. நாம் நன்கு தொடங்க வேண்டும் என்பது ஆணையாகவே உள்ளது.

வேதாகமம் வாய்மொழியாக ஏவுதல் பெற்றது என்று நம்புகின்ற வர்கள், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கு நான்கு அணுகுமுறை களை மேற்கொள்ளுகின்றனர்.[2] எண்ணற்ற வேறுபாடுகளும் இணைவுகளும் நிலவுகின்றன, ஆனால் அடிப்படை அணுகுமுறைகள் என்பவை நான்கு மட்டுமே உள்ளன. விளக்கவுரையாளர்கள் தங்கள் வேறுபாடான முறைகளுக்குப் புதிய பெயர்களைக் கொடுப்பதன்மூலம் இந்த விஷயத்தைக் குழப்புகின்றனர், ஆனால் - எல்லாமும் இல்லையென்றாலும் - பெரும்பாலான அணுகுமுறைகள், நான்கு பிரதானத் தலைப்புகளின்கீழ் வகைப்படுத்தப்பட முடியும். நான் இந்த நான்கு அணுகுமுறைகளையும் மதிப்பாய்வு செய்து, இவற்றின் பலங்கள் மற்றும் பலவீனங்கள் ஆகியவற்றைச் சுட்டிக்காண்பிப்பேன். பின்பு, நாம் இந்தப் பாடத்தை முடிக்கும்முன், இந்தப் பாடத்தொடரில் நாம் பயன்படுத்தவிருக்கும்

அணுகுமுறையைப் பற்றி விளக்கம் தருவேன்.

நாம், ஒவ்வொரு அணுகுமுறையையும் பரிசீலனை செய்கையில், வெளிப்படுத்தின விசேஷத்திற்கு விளக்கம்தருவதற்கான அத்தியாவசிய மான இரண்டு திறவுகோல்களை நமது சிந்தையில் வைத்துக் கொள்ள வேண்டும்:

*(1) இந்தப் புத்தகம் எழுதப்பட்டபோது அர்த்தம் கொண்டுள்ளதாக இருந்திருக்க வேண்டும்.* இயேசு, "சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவை களை" வெளிப்படுத்தினார் (1:1), யோவான், "[இந்தப் புத்தகம் பேசுவதைப் பற்றிய] காலம் சமீபமாயிருக்கிறது" என்று கூறினார் (1:3). இந்தப்புத்தகம், துன்புற்ற கிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் தரவும், விசுவாசநிறைவுடன் இருக்க அவர்களை உற்சாகப்படுத்தவும் எழுதப்பட்டது. ஆகையால் நமது படிப்பில் நாம் அடிக்கடி "இந்த அணுகுமுறையின்படி வெளிப்படுத்தின விசேஷம் விளக்கப்பட்டால், முதல் நூற்றாண்டில் துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர் களுக்கு இது என்ன அர்த்தம் கொண்டிருக்கும்?" என்று கேட்போம்.

*(2) இந்தப் புத்தகம் இப்போது அர்த்தம் கொண்டுள்ளதாக இருக்க வேண்டியுள்ளது.* இந்தப் புத்தகம் எல்லாக் காலத்திற்கும் உலகளாவிய மற்றும் கீழ்ப்படிய வேண்டிய செய்தியையும் கொண்டுள்ளது: இதை, "வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவை களைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்'' என்ற ஆசீர்வாதம் உரைக்கப்பட்டுள்ளது (1:3). "காதுள்ள" ஒவ்வொரு நபரும், "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் ... கேட்கக்கடவன்" என்று வற்புறுத்தப்படு கின்றார் (2:7). இந்தப் புத்தகத்தின் முடிவுப்பகுதியில், "இந்தப் புஸ்தகத் திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது'' என்று ஒரு விசேஷித்த புத்திமதி தரப் பட்டுள்ளது (22:18). இவ்விதமாக, நமது படிப்பின் ஒவ்வொரு பகுதியிலும், நாம், "வெளிப்படுத்தின விசேஷம் இந்த அணுகுமுறையின்படி விளக்கப் படுத்தப்பட்டால், அது இன்றைய நாட்களில் வாழுகின்ற நமக்கு என்னவாக அர்த்தப்படுகிறது?" என்றும் கேட்க வேண்டும்.

## எதிர்காலவியல் அணுகுமுறை

**இந்த அணுகுமுறையை பற்றிய விளக்கம்**

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் பெரும்பகுதியானது இந்தப் புத்தகம் எழுதப்பட்ட வேளையில் இருந்து தொலைதூரத்தில் உள்ள எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறுகிறது என்பதே எதிர்காலவியல் அணுகுமுறையின் கண்ணோட்டமாக உள்ளது.[3] இந்தப் புத்தகத்தின் பெரும்பான்மையான பகுதி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குச்[4] சற்றே முன்னதாக நடைபெற இருக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றியதாக உள்ளது என்று இந்த அணுகுமுறை திட்டவட்டமாகக் கூறுகிறது. இந்தக் கண்ணோட்டம் சிலவேளைகளில் ''பரவசநிலை'' கண்ணோட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.[5]

எதிர்காலவியல் அணுகுமுறை மாறுபாடுகளைக் கொண்டுள்ளது, ஆனால் பல ஆண்டுகளுக்கான களத்தைப் பற்றிக்கொண்டுள்ள ஒன்று ஆயிரம் ஆண்டுகள் முன் அரசாட்சிக் கொள்கை என்பதாக உள்ளது. இது ஆங்கிலத்தில் *"premillennialism"* எனப்படுகிறது. "Pre" என்றால் "முன்னால்" என்று அர்த்தப்படுகிறது மற்றும் "millennium" என்பது ஆயிரம் ஆண்டுகள் காலத்தைக் குறிக்கிறது. இந்தச் சொற்றொடர், இயேசு தமது *ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சிக்கு* (millennial) *முன்னதாக* (pre) திரும்ப வருவார் என்ற நம்பிக்கையைக் குறிக்கிறது. ஆயிரம் ஆண்டுகள் முன் அரசாட்சிக் கொள்கையாளர்களில் பெரும்பாலானவர்கள், இயேசு பூமிக்குத் திரும்ப வந்து ஆயிரம் ஆண்டுகள் காலத்திற்கு எருசலேமில் இருந்து ஆளுகை செய்வார் என்று திட்டவட்டமாக நம்புகின்றனர்.[6] இந்தக் கண்ணோட்டத்தின்படி, ஆயிரம் ஆண்டுகள் ஆட்சிக்குப்பின்பு பொதுவான நியாயத்தீர்ப்பு வரும், அந்த வேளையில் மக்கள் பரலோகம் அல்லது நரகம் செல்லும்படி நியமிக்கப் படுவார்கள்.[7]

இந்தக் கண்ணோட்டமானது வெளிப்படுத்தின விசேஷத்தின் விளக்கத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பதே நமது முதன்மையான அக்கறையாக உள்ளது. ஆயிரம் ஆண்டு அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் பல விபரங்கள் குறித்துத் தங்களுக்குள் கருத்து ஒருமையின்றி இருக்கின்றனர், ஆனால் (சில மாறுபாடுகளுடன்) பெரும்பான்மையானவர்கள் வெளிப்படுத்தின விசேஷத்தின் பொதுவாக வரைக்குறிப்பு என்று கீழ் உள்ள வரைவட்டவணையில் உள்ளவற்றைப் பின்பற்றுகின்றனர். (இந்த வரைவட்டவணை தவறானதாக உள்ளது என்று சுட்டிக்காண்பிப்பதற்காக நான் இதன் குறுக்கே ஒரு கோடு வரைந்துள்ளதைக் கவனியுங்கள்.) இந்த வரைவட்டவணை பற்றிய ஒரு மேல்கண்ணோட்டம் தொடர்ந்து கூறப்படுகிறது. சாய்வெழுத்துக்களில் உள்ள பத்திகளின்மீது விசேஷித்த கவனம் செலுத்துங்கள், இவைகள் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் பற்றி ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களின் அணுகுமுறையை வரைக்குறிப்பிடுகிறது.

*"யூதர்கள் கிறிஸ்துவை புறக்கணித்தல்."* இயேசு பூமிக்குரிய ஒரு இராஜ்யத்தை நிலைநாட்ட வந்தார், ஆனால் ஒரு இனத்தவர் என்ற வகையில் யூதர்கள் அவரைப் புறக்கணித்தபடியால் அவர் அதைச் செய்ய இயலாமல் போனது என்று ஆயிரம் ஆண்டுகள் முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களில் பெரும்பான்மையானவர்கள் போதிக்கின்றனர், இவ்விதமாக, இயேசுவின் இராஜ்யம் பற்றிய திட்டங்கள் தள்ளிப்போடப்பட்டன என்று அவர்கள் நம்புகின்றனர். வரைவட்டவணையின் குறுக்கே வரையப்பட்டுள்ள அழுத்தமான, கறுப்புநிற, படுக்கைக்கோடானது (இந்தக் கண் ணோட்டத்தின்படி) தேவனுடைய தீர்க்கதரிசனத் திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றைக் குறிக்கிறது.

*"சபையின் காலம்."* இவர்கள், இயேசு தமது இராஜ்யத்தை அமைக்க இயலாமல் போனதால், இராஜ்யம் நிலைநாட்டக்கூடும் வரையிலும் ஒரு தற்காலிக நிவாரணமாக இருக்கும்படிக்கு சபையை அமைத்தார் என்று

நம்புகின்றனர் (விதிப்படியாக, ஆயிரம் ஆண்டுகள் முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் சபைக்கும் இராஜ்யத்திற்கும் இடையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றனர்). மேலுள்ள வரைவட்டவணையில், ''சபையின் காலம்'' என்ற வார்த்தைகளின் மேல்பகுதியைச் சுற்றி வரையப்பட்டுள்ள கோடானது, தேவனுடைய தீர்க்கதரிசனத் திட்டங்களும் நோக்கங்களும் தற்காலிகமாய் இடையூறுக்கு உள்ளாயின என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.

*அதிகாரங்கள் 1-3:* வெளிப்படுத்தின விசேஷம் 1-3 அதிகாரங்கள், சபை நிலவிவரும் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் காலத்தைப் பற்றிக் கூறுகின்றன என்று ஆயிரம் ஆண்டுகள் முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் நம்புகின்றனர்.[8]

*"யூதர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதல்."* இயேசுவை மேசியா என்று ஒரு வேளையில் யூதர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் தேவனுடைய "தீர்க்கதரிசன (நிறைவேற்றத்திற்கான காலவேளை) இறங்கு வரிசை முறையில் எண்ணப்பட" தொடங்கும் என்றும் இவர்கள் முன்னுரைக்கின்றனர்.

*''பரவசநிலை மற்றும் உபத்திரவம் (7 ஆண்டுகள்).''* யூதர்கள் ஏற்றுக்கொள்ளுதல் என்பது ஏழு ஆண்டுகளுக்கான காலவேளையைத் தொடங்கி வைக்கும் என்று இவர்கள் நம்புகின்றனர். இது விசுவாசிகளுக்கு பரவசநிலையின் வேளையாக இருக்க வேண்டியுள்ளது,[9] இது இயேசுவைச் சந்திக்க, விசுவாசமுள்ளவர்கள் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதலுடன் தொடங்கும். விசுவாசமுள்ளவர்கள் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு, பூமியில் ஏழு ஆண்டுகள் காலத்திற்கு உபத்திரவ வேளை தொடங்கும் என்று இவர்கள் கூறுகின்றனர். கீழே பூமியில் பெருங்கலகம் ஆட்சிசெய்கிற வேளையில் இயேசுவும் அவரது பின்பற்றாளர்களும் ஆகாயத்தில் உலாவுவார்கள் என்று இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

*அதிகாரங்கள் 4-19:* வெளிப்படுத்தின விசேஷத்தின் அதிகாரங்கள் 4 முதல் 19 வரையுள்ள பகுதி இந்த ஏழு ஆண்டு காலத்தின் விபரங்களைக் கொடுக்கிறது, இந்தப் பகுதியில் பெரும்பான்மையாக (அதிகாரங்கள் 6 முதல் 19 வரை) உபத்திரவம் பற்றிய விபரங்களைக் கொடுக்கிறது என்று இவர்கள் நம்புகின்றனர்.

*"பூமியில் இயேசு (1,000 ஆண்டுகள்) அரசாளுதல்."* ஏழு ஆண்டுகளின் முடிவில், இயேசு பூமிக்கு இறங்கி வந்து, தமது விரோதிகளை முறிய அடித்து, பூமிக்குரிய தமது இராஜ்யத்தை அமைப்பார் என்று ஆயிரம் ஆண்டுகள் முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் கூறுகின்றனர். அவர் ஆயிரம் ஆண்டுகளுக்கு எருசலேம் நகரத்தில் பூமிக்குரிய அரியணையில் அமர்ந்து ஆளுகை செய்வார் என்று இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

*''கொஞ்சக்காலம்.''* இந்த ஆயிரம் ஆண்டுகளைத் தொடர்ந்து, சாத்தான் ஒரு பலம்வாய்ந்த சேனையை ஒன்றுகூட்ட அனுமதிக்கப்படும் ஒரு குறுகிய காலவேளை வரும் என்று இவர்கள் நம்புகின்றனர். இந்த "கொஞ்சக் காலம்" முடியும்போது, இயேசு சாத்தானையும் பொல்லாத சேனைகளையும் ஒரு மகா யுத்தத்தில் தோல்வியடையச் செய்வார்.

*"நியாயத்தீர்ப்பு."* ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர் களின் கூற்றுப்படி, இயேசுவுக்கும் சாத்தானுக்கும் இடையில் நடைபெறவிருக்கும் இந்த யுத்தத்தைத் தொடர்ந்து நியாயத்தீர்ப்பின் நாள் வரும்.

*அதிகாரம் 20:* வெளிப்படுத்தின விசேஷத்தின் 20ம் அதிகாரம் ஆயிரம் ஆண்டு அரசாட்சி, "கொஞ்சக்காலம்" மற்றும் நியாயத்தீர்ப்பின் நாள் ஆகியவற்றைப் பற்றிக் கூறுகிறது என்று இவர்கள் நம்புகின்றனர்.

*"நித்தியம்."* நியாயத்தீர்ப்பின் நாளைத் தொடர்ந்து நித்தியம் ஏற்படும், இதில் நீதிமான்கள் பரலோகத்திலும் நீதியற்றவர்கள் நரகத்திலும் இருப்பார்கள்.

*அதிகாரம் 21; 22:* வெளிப்படுத்தின விசேஷத்தின் அதிகாரங்கள் 21ம் 22ம், நீதிமான்கள் நித்தியத்திற்கும் இருக்கப்போகிற பரலோகத்தைப் பற்றிக் கூறுகிறது என்று இவர்கள் நம்புகின்றனர்.

வேதாகம போதனையில் பழக்கம் உள்ளவர்கள் இந்தக் காட்சி அமைவில் பல தவறுகளைச் சுட்டிக்காண்பிப்பார்கள். இருப்பினும் இப்போதைக்கு நாம், இந்த அணுகுமுறையில் உள்ள தவறுகளை மட்டும் ஆழ்ந்து சிந்திப்போம், பின்வருவதைப் பற்றிச் சிந்தியுங்கள்: இங்கு குறிப்பிடப்பட்டவர்கள், மூன்று அதிகாரங்கள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளைப் பற்றிக் கூறுகிறது, பதினாறு அதிகாரங்கள் ஏழு ஆண்டுகளின் விபரங்களை மாத்திரம் கூறுகிறது, மற்றும் ஒரு அதிகாரத்திற்கும் சற்றே குறைவான பகுதியில் ஆயிரம் ஆண்டுகள் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது என்று போதிக்கின்றனர்! ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக் காரர்களில் பெரும்பான்மையானோருக்கு, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் அடிப்படையில், உபத்திரவத்தின் ஏழு ஆண்டுகளின்போது பூமியில் உள்ள பெருங்குழப்பமான நிலைகளைப் பற்றியதாகவே இருக்கிறது.

Scofield Reference Bible என்ற வேதாகமமே எதிர்காலவியல் கண்ணோட்டத்தைப் பரப்புவதற்கு ஆண்டுகளினூடே முக்கியத்துவமான வழிமுறையாக இருந்துள்ளது.[10] ஹால் லின்ட்ஸி என்பவர் எழுதிய *The Late Great Planet Earth* என்ற புத்தகமானது எதிர்காலவியல் கண்ணோட் டத்தின் மிகப்புகழ் பெற்ற நடக்கைகளில் ஒன்றாக இருந்துள்ளது.[11]

### இந்த அணுகுமுறையின் "பலங்கள்"

எதிர்காலவியல் என்பது "பலங்கள்" என்பதை நான் மேற்கோள் குறிகளுக்குள் இடும் அளவுக்குப் பிரச்சனைகள் அமையப் பெற்றுள்ளது. இது ஒரு மிகப் புகழ்பெற்ற அணுகுமுறையாக உள்ளது; இது இன்றைய நாட்களின் தலைப்புச் செய்தியைக் குறித்துக் கிளர்ச்சியடையவும் வேதாகமத்தில் மங்கலான பகுதிகளில் இதைப் பற்றிய விபரம் காண ஆர்வமுள்ளவர்களுக்கு மிகவும் பிரியமானதாக உள்ளது. இந்த அணுகுமுறையும்கூட இன்றைய நாட்களுக்கு ஒரு செய்தியைக் கொண்டுள் ளது: யுகத்துவச் சுவிசேஷ ஊழியர்களில் பெரும்பான்மையானோரால் பிரசங்கிக்கப் படுகின்றபடி, "மனந்திரும்புங்கள்! இயேசு சீக்கிரம் வருகின்றார்!" என்பதே செய்தியாக உள்ளது.

எதிர்காலவியலாளர்கள், (அவர்களின் வார்த்தைகளிலேயே) "வெளிப் படுத்தின விசேஷத்தை நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளுதல்" என்ற உண்மையில்தான் தங்களின் அணுகுமுறையினுடைய பலம் உள்ளது என்று நம்புகின்றனர். நம்மில் பலர் செய்வதைவிட அதிகமாக அவர்கள், இந்தப் புத்தகத்தின் தேர்ந்துகொள்ளப்பட்ட பகுதிகளை (மாத்திரம்) அதிக நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொள்கின்றனர் என்பதுதான் உண்மையாக உள்ளது; வெளிப்படுத்தின விசேஷம் 20ல் உள்ள "ஆயிரம் ஆண்டுகள்" என்பது இதற்கு தனிச்சிறந்த உதாரணமாக உள்ளது. இருப்பினும், நான் பல கேள்விகளை முன்வைப் பேன்: ஒரு தனிநபர், அடையாள மொழிநடையை நேரடி அர்த்தத்தில் விளக்கப்படுத்துகையில் அது பலத்திற்கு அடையாளமாக உள்ளதா? அல்லது அது அவரது விளக்கப்படுத்தும் திறமைகள் பலவீனமாய் உள்ளன என்பதற்கு அடையாளமாக உள்ளதா? மீண்டுமாக, ஒரு தனிநபர், தமது இறையியல் நிலைப்பாட்டை அடையாள உருவகங்களின் அடிப்படையில் அமைக்கும்போது, அது பலத்திற்கு அடையாளமாக உள்ளதா? அல்லது அது அவரது நிலைப்பாடு பலவீனமாக உள்ளது என்பதற்கு அடையாளமாக உள்ளதா?

இறைவெளிப்பாட்டு இலக்கியம் *அடையாளங்களின் மூலம்* போதிப் பதை ஒரு பண்பாகக் கொண்டுள்ளது என்பதைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள். அடையாளத்துவ மொழிநடை உட்பட, எந்த ஒரு உருவக மொழிநடையையும் "நேரடி அர்த்தத்தில்" நடத்துதல் என்பது அதை விளக்கப்படுத்துவதற்கான திறவுகோலாக இருப்பதில்லை, ஆனால் அதை *இயல்பாகவே* நடத்துதல் - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அதை ஒரு உருவக மொழிநடையாகவே நடத்துதல் என்பதே அதை விளக்கப் படுத்துவதற்கான திறவுகோலாக இருக்கிறது. இயேசு, "நானே வாசல்" என்று கூறினார் (யோவான் 10:9), ஆனால் நாம் அவரது இந்தக் கூற்றை நேரடி அர்த்தத்தில் எடுத்துக் கொள்வதில்லை. அதாவது, இயேசு ஒரு கதவு நிலையுடன் கீல்கொண்டு பிணைக்கப்பட்டுள்ளார் என்று நம்புவதில்லை. மாறாக, நாம் அவரது வார்த்தைகளை இயல்பாகவே எடுத்துக் கொள்ளு கின்றோம். இரட்சிப்பிற்குள் பிரவேசிப்பதற்கு ஒரே வழியாக இயேசு இருக்கின்றார் என்று வலியுறுத்துவதற்கு அவர் உருவக மொழிநடையைப் பயன்படுத்தினார் என்று நாம் புரிந்து உணர்ந்து கொள்கின்றோம்.

### இந்த அணுகுமுறையின் பலவீனங்கள்

எதிர்காலவியல் என்பது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் பற்றிக் கொண்டுள்ள சமானமற்ற கண்ணோக்கு என்பது அதன் பலவீனங் களில் ஒன்றாக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தின் பெரும்பகுதியானது ஏழு ஆண்டுகள் காலத்தைப் பற்றி நமக்குக் கூறுவதற்காக எழுதப்பட்டது என்று அறிவிக்கிற எந்த அணுகுமுறையைப் பற்றியும் நாம் ஐயம் கொண்டாக வேண்டும்.

புரூஸ் மெட்ஸ்ஜெர் அவர்கள், "மரத்துப்போன நேரடி அர்த்தம் கொள்ளுதல்"[12] என்று அழைக்கும் ஒரு குணத்தைச் சார்ந்திருத்தல் என்பது இந்த அணுகுமுறையின் இன்னொரு பலவீனமாக உள்ளது. வசனப்பகுதியே

அடையாளங்களின் அர்த்தத்தை அடிக்கடி/பெரும்பாலும் விளக்குகிறது (1:20; 4:5; 5:6, 8; 12:3, 9; 17:9, 12, 15, 18; 19:8; 20:14), எல்லாமும் இல்லையென்றாலும், இந்தப் புத்தகத்தின் பெரும்பகுதி நேரடியாக எடுத்துக் கொள்ளப்படக் கூடாததாக உள்ளது என்ற சிந்தனையை அடிக்கோடிட்டுக்கொள்ளுகிறது.

முன்னுரைக்கப்பட்ட நிகழ்ச்சிகள் சீக்கிரமாய் நடைபெற வேண்டியிருந்தன என்ற யோவானின் கூற்றுக்குச் சீரற்ற நிலையில் இருத்தல் என்பது இந்த அணுகுமுறையின் திறவுகோல் பலவீனமாக உள்ளது: "சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்" (1:1). "வேண்டியவைகளை" என்பது *dei* என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது, இது "ஒழுங்குமுறைரீதியில் அவசியத்தை உள்ளடக்குகிற நபர்த்துவமற்ற கிரேக்க வினைச் சொல்லாக" உள்ளது.[13] இயேசு, "தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, முன்றாம் நாளில் எழுந்திருக்க *வேண்டும்*" என்று காண்பித்தபோது இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (மத்தேயு 16:21). மேலும், "சீக்கிரத்தில்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது, "விரைவில்" அல்லது "துரிதமாக" என்று அர்த்தப்படுகிறது. தீமோத்தேயுவுக்குப் பவுல், "நீ *சீக்கிரமாய்* என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு" என்று கூறியபோது, இதே வார்த்தையைத்தான் பயன்படுத்தினார் (2 தீமோத்தேயு 4:9). வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது அடிப்படையில், எதிர்காலத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு நடக்க விருந்த நிகழ்ச்சிகள் பற்றி எழுதப்படவில்லை.

இந்த வகையில் விளக்கப்படுத்துதல் என்பது, முதல் நூற்றாண்டில் துன்புறுத்தப்பட்டுக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்குச் சிறிதளவே செய்தியைக் கொண்டிருக்கும் அல்லது அவர்களுக்குச் செய்தியே இருந்திராது என்பது இதன் குறிப்பிடத்தக்க பலவீனமாக உள்ளது. நீங்கள் ஒரு பயங்கரமான வேதனையில் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள், அப்போது உங்கள் நண்பர் உங்களிடம் வந்து, "நீங்கள் துன்புறுகின்றீர்கள் என்பதை நான் புரிந்து கொள்கின்றேன், *இப்போதில் இருந்து ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு*, தேவன் இவை எல்லாவற்றையும் நன்மையாகத் திருப்புவார்!" என்று கூறுகின்றார். அது உங்களுக்கு ஆறுதலைக் கொண்டுவருமா அல்லது நீங்கள், "அது மகாப்பெரிய விஷயம்தான், ஆனால் எனக்கு *இப்போதல்லவா* உதவி தேவைப்படுகிறது?" என்று பதில் கூறும்படி சோதிக்கப்படுவீர்களா?

இந்த அணுகுமுறையின் அடிப்படைக் கருத்துக் கொள்கையானது வேதாகமத்தின் தெளிவான போதனையுடன் முரண்படுகிறது என்பதே இதன் மரண பலவீனமானதாக உள்ளது. உதாரணமாக, இந்த அணுகுமுறையானது நமது கர்த்தர் தமது இரத்தத்தைக் கிரயம் கொடுத்து வாங்கிய

சபையைச் (நடபடிகள் 20:28) சிறுமைப்படுத்துகிறது. ஆயிரம் ஆண்டுகள் முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களில் பலருடைய கருத்தின்படி, இயேசு யூதர்களினால் தடைப்படுத்தப்படாது இருந்திருந்தால், அவர் தமது "முதல்வருகையின்போதே" தமது இராஜ்யத்தை நிலைநாட்டியிருப்பார், அப்படி நடந்திருந்தால் சபை என்ற ஒன்று இருந்தே இருக்காது.[14] இது உண்மையாய் இருக்க முடியாது, ஏனெனில் சபை என்பது தேவனுடைய அனாதி தீர்மானத்தில் வலிவார்ந்த பாகமாக இருந்தது (எபேசியர் 3:10, 11, 21).

ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களை மறுத்துரைத்தல் என்பது இந்தப் பாடத்தொடரின் நோக்கமல்ல,[15] ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய யூகங்களில் பெரும்பான்மையானவை ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கையின் அடிப்படையைக் கொண்டுள்ளன. அந்தக் காரணத்தினால் - மற்றும், எதிர்காலவியல் அணுகுமுறை என்பது இந்தப் புத்தகத்திற்கான மிகப்பிரபலமான அணுகுமுறையாக இருக்கிற காரணத்தினால் - நமது படிப்புகளில் நான் அவ்வப்போது, ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களுடைய விளக்கமளித்தலின் பலவீனங்களில் சிலவற்றைச் சுட்டிக்காண்பிப்பேன்.

## தொடர் வரலாற்று ரீதியான அணுகுமுறை

**இந்த அணுகுமுறையைப்பற்றிய விளக்கம்**

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது முதல் நூற்றாண்டிலிருந்து உலகத்தின் முடிவு வரையுள்ள வரலாற்றின் (விசேஷமாக, சபை வரலாற்றின்) விரிவான திட்ட வரைபடம் ஒன்றைத் தருகிறது என்பது தொடர் வரலாற்று அணுகுமுறையின் கண்ணோட்டமாக உள்ளது.

> இந்தக் கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை, பெந்தெகொஸ்தே நாள் தொடங்கி உலகத்தின் முடிவு வரையில் சபையின் நிகழ்ச்சிகளினுடைய அடையாளச் சித்தரிப்பாகக் காண்கின்றனர். இவர்கள் ... உண்மையான யுத்தங்கள் (பயணங்களின் யுத்தங்கள்), இயக்கங்கள் (மொகம்மதியனியம், புரொட்டஸ்டன்டு சீர்திருத்தம்), தனிநபர்கள் (நெப்போலியன், போப், ஹிட்லர்) அல்லது நிகழ்ச்சிகள் (சகிப்புத்தன்மை பற்றிய கான்ஸ்டன்டைனின் பிரகடனம்) ஆகியவை இந்தப் புத்தகத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் காண்பதற்கு விரும்புகின்றனர்.[16]

இந்த அணுகுமுறையானது நாள்வரிசை அட்டவணைக் கண்ணோட்டம், வரலாற்றின் வரைக்குறிப்பு அணுகுமுறை மற்றும் வரலாற்று ரீதியான (அல்லது வரலாற்றியல் ரீதியான) விளக்கப்படுத்தும் முறைமை என்றும் அழைக்கப்பட்டுள்ளது.[17]

தொடர் வரலாற்று ரீதியான அணுகுமுறையானது புரொட்டடஸ்

டன்டுகள் மத்தியில் பிரபலமாக இருந்துள்ளது. ஒருசில பத்தாண்டுகளுக்கு முன்பு வரையிலும், பெரும்பாலான புரொட்டஸ்டன்டு விளக்கவுரை யாளர்களால் இந்தக் கண்ணோட்டம் பற்றிக்கொள்ளப்பட்டிருந்தது. பொதுவாக ரோமன் கத்தோலிக்கத்திற்கும், குறிப்பாக போப்பிற்கும் சிறப்புக் கவனம் தரப்பட்டது. இந்த அணுகுமுறையின் செல்வாக்கு மிக்க நடத்துதல்கள், ஆல்பர்ட் பார்னெஸ் மற்றும் ஆதம் கிளார்க் ஆகியோரின் விளக்கவுரைகளை உள்ளடக்கியிருக்கின்றன.[18] ஜான் T. ஹின்ட்ஸ் என்பவர் வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய தமது விளக்க உரையில் பார்னெஸின் அணுகுமுறையைப் பெருமளவுக்கு பயன்படுத்தினார், இது Gospel Advocate என்ற பிரபலமான பத்திரிகையில் வெளிவந்த புதிய ஏற்பாட்டின் மீதான விளக்கவுரை வரிசைத்தொடரின் பகுதியாக உள்ளது.[19]

**இந்த அணுகுமுறையின் பலங்கள்**

சிந்தித்தலின் இந்த வரிசை முறைமையானது கத்தோலிக்கத்தை எதிர்ப்பவர்களுக்குச் சிறப்பாகப் பிரியமானதாக இருந்துள்ளது. மேற்கு ஐரோப்பாவின் வரலாற்றை வெளிப்படுத்தின விசேஷத்தின் தரிசனங் களுடன் இணைவிக்கும் கால அட்டவணைகளை விளக்கவுரையாளர்கள் எவ்வளவு கற்பனைத் திறனுடன் உருவாக்கினர் என்பதைக் காண்பது மிகவும் ஈர்ப்புடையதாக உள்ளது. இந்த அணுகுமுறை இன்றைய நாட்களுக்குச் செய்தியைக் கொண்டுள்ளது என்பது இதன் பலங்களில் ஒன்றாக உள்ளது: “வரலாறு முழுவதும் தேவனுடைய கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது.” பொதுவாக இந்த நம்பிக்கையானது எதிர்காலவியலினால் முன்வைக்கப்பட்ட உள்ளான அபாயங்களைக் கொண்டிருப்பதில்லை.

**இந்த அணுகுமுறையின் பலவீனங்கள்**

இந்தக் கண்ணோட்டமானது பெருமளவுக்கு யூகத்துவமானதாகவும் அக உணர்வு சார்ந்ததாகவும் உள்ளதென்பது இதன் பலவீனமாகும். விளக்கவுரையாளர்கள், சபையின் வரலாற்றில் முதல் சில நூற்றாண்டுகள் கடந்து சென்ற பின்பு அவர்களின் விளக்கங்கள் பெரிதும் மாறுபட்டன.[20] ஒரு எழுத்தாளர், குறிப்பிட்ட ஒரு தரிசனமானது மார்ட்டின் லூத்தரையும் சீர்திருத்தத்தையும் குறித்தது என்று நம்புகையில், இன்னொருவர் அதை அச்சிடும் கருவியின் கண்டுபிடிப்பு என்று அடையாளப்படுத்தினார்.

விளக்கவுரையாளர்கள் மேற்கு ஐரோப்பாவில் நடைபெற்ற நிகழ்ச்சி களின் மீது மேலெழுந்தவாரியாகக் கவனம் செலுத்தி, சுவிசேஷம் சென்றடைந்துள்ள மற்ற இடங்களைப் பெருமளவுக்குப் புறக்கணித்தனர் என்பது ஒரு சார்புநிலை பலவீனமாக உள்ளது. தேவன் நிச்சயமாகவே முழு உலகத்தைக் குறித்தும் அக்கறை உள்ளவராய் இருக்கின்றார்.

தொடர் வரலாற்று ரீதியான விளக்கவுரையாளர்களால் பயன்படுத்தப் படும் செய்முறையானது, மக்களை இயேசுவின் இரண்டாம் வருகை குறித்து நாள் அமைப்பவர்களாகப் பங்களித்துள்ளது என்பது இந்த அணுகுமுறையின் துரதிர்ஷ்டவசமான பலவீனமாக உள்ளது. பொதுவாக அவர்கள், “ஒருநாள் = ஒரு ஆண்டு” என்று யூகித்துக் கொள்கின்றனர் (இது

*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் பொறுத்தமட்டில் அநாவசிய மான யூகமாகும்).[21] கிறிஸ்துவின் மறுவருகைக்கு மிகச்சரியான நேரத்தை அமைக்க முயற்சி செய்துள்ள யாவரும் "ஒரு நாள் = ஒரு ஆண்டு" என்ற கருத்தாக்கத்தைப் பயன்படுத்தியுள்ளனர். அவர்களின் கால அட்ட வணைப்படி இயேசு வரத்தவறினார் என்பது, அவர்களைக் கள்ளத்தீர்க்க தரிசிகள் என்று வெளிப்படுத்தியுள்ளது. இரண்டாம் வருகையின் காலம் பற்றி எந்த மனிதரும் அறிய முடியாது (மத்தேயு 24:36; 1 தெசலோனிக்கேயர் 5:4; 2 பேதுரு 3:10; வெளிப்படுத்தின விசேஷம் 3:3; 16:15).*

*தொடர் வரலாற்று ரீதியான அணுகுமுறையின்படி, வெளிப்படுத்தின விசேஷத்தின் பெரும்பகுதி, முதலாம் நூற்றாண்டில் இருந்து மிகத்தொலை வில் உள்ள நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறுகிறது என்பது இதன் மிகத்தீவிரமான பலவீனமாக உள்ளது. யோவான், இந்தப்புத்தகமானது, "சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளை"க் கூறுகிறது என்று 1:1ல் கூறினார், மேலும் அவர் 1:3ல், "காலம் சமீபமாயிருக்கிறது" என்று அறிவித்தார்.*

*இந்த அணுகுமுறையானது, தரிசனங்கள் நாள்வரிசை முறைமையின் படியானவையாக, உலக முடிவு வரையிலும் ஒரு நிகழ்ச்சியை இன்னொரு நிகழ்ச்சி தொடரும் என்று பொதுவாகக் கண்ணோக்குகிறதென்பது இதன் இன்னொரு பலவீனமாக உள்ளது. இது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பல இடங்களில் பிரச்சனைகளை முன்னிறுத்துகிறது. எடுத்துக்காட்டாக, இந்தப் புத்தகத்தின் மையப்பகுதியில், அதாவது அதிகாரம் 12ல் இயேசுவின் பிறப்பு சித்தரிக்கப்படுகிறது.[22]*

*இந்த விளக்க முறைமையானது சரியாக இருந்தது என்றால், வெளிப் படுத்தின விசேஷம் புத்தகம், முதல் நூற்றாண்டில் வாழ்ந்து துன்புறுத்தப் பட்ட கிறிஸ்தவர்களுக்குச் சிறிதளவே ஆறுதலைக் கொடுத்திருக்க வேண்டும் என்பது தெளிவான பலவீனமானதாக உள்ளது. இந்தப் புத்தகமானது அவர்களுக்கு, தீர்க்க இயலாத ஒரு புதிராக இருந்திருக்கும். எதிர்கால வரலாறு பற்றிய தீர்க்கதரிசனங்களை அவர்கள் பகுத்தறிய முடிந்திருப்பினும், அது அவர்களுக்கு அப்போதும் சிறிதளவே உடனடிப் பயன் உள்ளதாய் இருந்திருக்கும். தலை வெட்டப்படுவதற்குக் கொண்டு போகப்படும் ஒரு கிறிஸ்தவரிடத்தில், "சபையானது விசுவாச விலக்கம் அடையும், ஆனால் உண்மையுள்ளவர்கள் கடைசியில் வெற்றி அடைவார்கள்" என்று கூறுவதைப் பற்றிக் கற்பனை செய்துபாருங்கள். அப்படிப்பட்ட செய்தியானது அவருக்குத் தண்டனை நிறைவேற்றுபவர் களை எதிர்முகமாய் சந்திக்க அவருக்கு பலத்தைத் தருமா?*

*கிறிஸ்து மறுபடியும் வருவதற்கு முன் எவ்வளவு காலம் செல்லும் என்று நாம் அறிவதில்லை என்பது இந்த அணுகுமுறையின் மரண பலவீனமாக - இது தனது ஏறக்குறைய உலகளாவிய ஜனரஞ்சகத் தன்மையை இழக்கக் காரணமான பலவீனமாக - இருக்கிறது. தொடர் வரலாற்று ரீதியான விளக்கவுரையாளர்களில் பெரும்பான்மையானவர்கள், இந்தப் புத்தகத்தின் இறுதி நிகழ்ச்சிகளைத் தாங்கள் வாழ்ந்த நாட்களில் நடக்கவிருந்ததாகவே கருத்துத் தெரிவித்தனர்; அவ்வாறில்லையென்றால் பல தரிசனங்களுக்கு விளக்கம் அளிக்க இயலாதிருந்தது. இது, வரலாற்றில் புதிய மற்றும்*

குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெறும்போது, அவர்களின் கால அட்டவணைகள் தொடர்ந்து மாறுதல்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று அர்த்தப்படுகிறது. பின்வருவதைச் சிந்தித்துப் பாருங்கள்: இன்னும் நான்காயிரம் ஆண்டுகளுக்குக் கிறிஸ்து வராதிருந்தால் என்னவாகும்? அது, வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டவற்றில் மூன்றில் ஒரு பகுதி மாத்திரம் நிறைவேறியுள்ளது என்றும், நாம் அந்தப் புத்தகத்தின் மூன்றில் இரண்டு பகுதியைப் பொறுத்த மட்டில், பெருமளவு இருளில்தான் இருப்போம் (புரிந்துகொள்ளாது இருப்போம்) என்றும் அர்த்தப்படும்!

இந்தக் கண்ணோட்டத்தை ஆதரித்தவர்கள் கத்தோலிக்கத்தின் தவறுகளைக் குறித்து அக்கறையாய் இருந்தனர் என்ற உண்மையை நான் பாராட்டுகின்றேன், ஆனால் அவர்களின் தவறுகளை வெளிப்படுத்துவதற்கு வேதாகமத்தில் இன்னும் சிறந்த வசனப்பகுதிகள் அடங்கியுள்ளன. "பிரசங்கத்துவ யுத்தத்திற்கான[23] ஆயுதங்களை அளித்தல் என்பதை அல்ல, ஆனால் அதற்கு மாறாக, துன்புற்றவர்களை ஆறுதல் படுத்துதல் என்பதுதான்" வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் பிரதான நோக்கமாக உள்ளது.

## முடிந்துபோனது [Preterist] என்ற அணுகுமுறை

**இந்த அணுகுமுறையைப்பற்றிய விளக்கம்**

மூன்றாவது அணுகுமுறையானது பொதுவாக, முடிந்தபோனது என்ற அணுகுமுறை என்பதாக அழைக்கப்படுகிறது. "Preterist" என்ற வார்த்தையானது, "அப்பால்" அல்லது "கடந்துசென்ற" என்று அர்த்தம் தருகிற இலத்தீன் வார்த்தையில் இருந்து வருகிறது.[24] வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம், சபையின் தொடக்க நூற்றாண்டுகளில் - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், நமது கடந்த காலத்தில் - நடந்தவற்றையே (எல்லாமும் இல்லையென்றாலும்) இந்தப் புத்தகத்தின் பெரும்பகுதி கூறுகிறது என்ற கண்ணோட்டமே முடிந்துபோனது என்ற அணுகு முறையாக உள்ளது.

முடிந்துபோனது என்ற அணுகுமுறையின் மிகத்தீவிரமான ஒரு வடிவமானது, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் எழுதப்பட்ட காலத்தில் ஏற்கனவே நடந்திருந்த (அல்லது குறைந்தபட்சம் மிகவிரைவில் நடந்திருந்த) நிகழ்ச்சிகளைப் பற்றி மாத்திரமே வெளிப்படுத்தின விசேஷம் பேசுகிறது என்று போதிக்கிறது: உதாரணமாக, மேசியாவின் வருகை, சபை நிலைநாட்டப்படுதல், மற்றும் எருசலேமின் அழிவு. இந்தக் கண்ணோட்டத் தின்படி வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது கிறிஸ்துவுக்குள் தேவனு டைய நோக்கங்களின் நிறைவேற்றத்தினுடைய மறுகண்ணோட்டமாக உள்ளது. ஆகையால், இது மறுகண்ணோட்ட அணுகுமுறை என்றும் அழைக்கப்பட்டுள்ளது. ஃபோய் E. வாலெஸ் Jr. என்பவர் இந்தக் கண்ணோட்டத்தைத் தீவிரமாக முன்மொழிபவராக இருந்தார்.[25] இது சில பலங்களைக் கொண்டுள்ளது, ஆனால் பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்குப்

*பழக்கமான தகவலை வெறுமனே மறுகண்ணோட்டம் இடுவதற்குத் தேவன், இப்படிப்பட்ட ஒரு வினோதமான முறையை (இறை வெளிப்பாட்டு அடையாளத்துவத்தை) எதற்காகப் பயன்படுத்தியிருப்பார்?*

*''கி.பி. 70 கோட்பாட்டை''ப்*[26] *பரிந்துரைப்பவர்களால் இந்த அணுகுமுறையில் இருந்து சில முடிவுகள் அடையப்பட்டுள்ளன. உலகத்தின் பல பகுதிகளில் இந்தத் தவறான போதனையானது சபையைத் தொல்லைப் படுத்தியுள்ளது.*

*பின்வரும் குறிப்புரைகள், தரம்வாய்ந்த முடிந்துபோனது என்ற அணுகுமுறையை நோக்கித் திருப்பப்பட்டவையாய் உள்ளன, இந்த அணுகுமுறையானது தற்கால வரலாற்றுக் கண்ணோட்டம் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. மாற்றுருவாக்கப்பட்ட முடிந்துபோனது என்ற அணுகுமுறையானது வெளிப்படுத்தின விசேஷத்திற்கு J. W. இராபர்ட்ஸ் அவர்கள் எழுதிய விளக்கவுரையில் பயன்படுத்தப் பட்டுள்ளது.*[27]

***இந்த அணுகுமுறையின் பலங்கள்***

*இந்த அணுகுமுறையானது முதல் நூற்றாண்டின் வரலாற்றுச் சூழ்நிலையில் திடமாக வேரூன்றியுள்ளது என்பது இதன் பலமாக உள்ளது. வேதாகமத்தில் உள்ள பெரும்பாலான புத்தகங்கள் எழுதப்பட்ட காலங்களின் வரலாற்றைப் பற்றிய சிலவிஷயங்களை நாம் அறியும்போது, அவற்றைப் பற்றிய நமது புரிந்து கொள்ளுதல் மேம்படுத்தப்படுகிறது. இந்த அணுகுமுறையானது முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பலத்த செய்தியொன்றைக் கொண்டுள்ளது என்பது இதன் இன்னொரு பலமாக உள்ளது: ''ரோமப்பேரரசு வெற்றிகொள்ள இயலாததாகக் காணப்படலாம், ஆனால் தேவன் கட்டுப்பாடு செலுத்துபவராய் இருக்கின்றார். முடிவில், ரோமாபுரியானது அழிக்கப்படும், நீங்கள் வெற்றியடைவீர்கள்!''*

***இந்த அணுகுமுறையின் பலவீனங்கள்***

*முன்நடந்தது என்ற கண்ணோக்கானது, வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள ஒவ்வொன்றும் ரோமப் பேரரசின் நாட்களிலேயே நிறைவேற்றப் பட்டது என்று கண்டிப்பான கருத்தில் கூறுகிறது. இது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை ''முதல் நூற்றாண்டுக்காக எழுதப்பட்ட ஒரு கைப்பிரதி''*[28] *என்பதைக் காட்டிலும் சற்றே அதிகமாக்குவதாக மட்டும் இருக்கும். இப்படிப்பட்ட ஒரு கண்ணோக்கில் இரு பலவீனங்கள் வெளிப் படையாய் உள்ளன. முதலாவது, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது இன்றைய நாட்களுக்கு, அளவான செய்தியை மாத்திரம் கொண்டிருக்கும். இரண்டாவது, இப்படிப்பட்ட ஒரு கண்ணோக்கமானது ''கடைசி விஷயங்கள்'' பற்றி இந்தப் புத்தகத்தில் உள்ள தெளிவான போதனைகளைப் புறக்கணிக்கிறது.*

*எதிர்காலவியல் அணுகுமுறையைப் போலின்றி, வெளிப்படுத்தின விசேஷத்தின் முன்நடந்தது என்ற கண்ணோட்டமானது மற்ற இடத் திலுள்ள தெளிவான போதனையை மீறுவதில்லை. தொடர்வரலாற்று*

ரீதியான அணுகுமுறையில் உள்ளாகக் கட்டியமைக்கப்பட்டுள்ள பலவீனமும் முன்நடந்தது என்ற கண்ணோட்டத்திற்கு இருப்பதில்லை: இதை அவ்வப்போது திருத்த வேண்டிய அவசியம் இல்லை. இவ்விதமாக, இதைப் பற்றிய ஏராளமான விஷயங்கள் பாராட்டத்தக்கவையாக உள்ளன, ஆனால் இன்றைய நாட்களின் வாசகர்களுக்குப் பயன்நிறைந்ததாக இருக்க இதற்குச் சில மாறுபடுத்துதல்கள் அவசியமாக உள்ளது.[29]

## அடையாளத்துவ அணுகுமுறை

**இந்த அணுகுமுறையைப்பற்றிய விளக்கம்**

அடையாளத்துவ அணுகுமுறையானது, வரலாற்றின் தத்துவ அணுகுமுறை, நாடகவியல் அணுகுமுறை, இலட்சிய அணுகுமுறை, தீர்க்கதரிசனக் கொள்கை முறைமை, ஆவிக்குரிய பள்ளி, காலம்கடந்த கருத்துரு போன்ற பல பெயர்களைக்கொண்டு அழைக்கப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையைப் பற்றி நான் முதன்முதலில் கேள்விப்பட்டபோது, “அடையாளத்துவ அணுகுமுறை” என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டதால், நான் இந்தச் சொற்றொடரையே இவ்விடத்தில் பயன்படுத்துகின்றேன். பெரும்பாலான எழுத்தாளர்கள் இந்த அணுகுமுறையை, அடையாளத்துவக் கண்ணோட்டம் என்றோ அல்லது வரலாற்றின் தத்துவப் பள்ளி என்றோ குறிப்பிடுகின்றனர்.

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது ஒவ்வொரு காலகட்டத்திலும் நன்மை மற்றும் தீமை ஆகியவற்றிற்கு இடையில் நடைபெறும் போராட்டத்தை, கடைசியில் நன்மையே ஜெயிக்கிறதான போராட்டத்தை அடையாளத்துவமாகப் பேசுகிறது. இந்த அணுகுமுறையானது, வெளிப்படுத்தின விசேஷத்தின் வரலாற்றுப் பின்னணி பற்றி ஏறக்குறைய அக்கறையின்றி உள்ளது. மற்றும் இது, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் நிகழ்ச்சிகளையோ, மக்களையோ அல்லது இடங்களையோ அடையாளப்படுத்தச் சிறிதளவே முயற்சி செய்கிறது அல்லது எந்த முயற்சியும் செய்வதில்லை. இந்த அணுகுமுறையானது, விபரங்களைக் காட்டிலும், தரிசனங்களின் ஒட்டுமொத்தக் கருத்துவலிவு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்று வலியுறுத்துகிறது.

இதுதான் நான் 1956ல் அபிலேன் கிறிஸ்தவக் கல்லூரியில் ஃபிராங்க் பேக் அவர்களின்கீழ் படித்தபோது அடிப்படை அணுகுமுறையாக இருந்தது, இந்த அணுகுமுறையே, வெளிப்படுத்தின விசேஷத்தை நான் விரும்பக் காரணமாய் இருந்தது. வில்லியம் ஹென்ரிக்ஸென் அவர்களின் *More Than Conquerors* என்ற புத்தகம் எங்கள் பாடப்புத்தகமாய் இருந்தது.[30] ஹென்ரிக்ஸென் அவர்களின் அணுகுமுறையானது மாற்றுருவாக்கப்பட்ட அடையாளத்துவ அணுகுமுறையாக[31] இருந்தது, இது வரலாற்றுப் பின்னணியை முற்றிலுமாகப் புறக்கணிப்பதில்லை.[32] இந்த அணுகுமுறைதான் எனது மாணவிகளில் ஒருத்தி “இப்போதுதான் நான் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை வகைப்படுத்துவது போன்ற ஒன்றைச் செய்கின்றேன்”

*என்று எழுதக் காரணமாயிற்று.*

***இந்த அணுகுமுறையின் பலங்கள்***

*அடையாளத்துவ அணுகுமுறையானது விளக்கவுரையளித்தலுக்கான எல்லா முறைமைகளிலும் "மிகவும் குறைவான அபாயமுள்ள" அணுகுமுறை யாக இருக்கிறது: இது, மற்ற சில கண்ணோட்டங்களின் நயப்பாங்கற்ற யூகத்தை நீக்கிப்போடுகிறது. மற்றும் இது, காலவறையற்ற கொள்கையில் கவனம் செலுத்துவதால் எல்லா அணுகுமுறைகளைவிடவும் நடைமுறைக்கு அதிகம் உகந்ததாக உள்ளது. வெளிப்படுத்தினவிசேஷம் புத்தகத்தின் வரலாற்றுப் பின்னணியை ஒருவர் அறிந்திருப்பினும் இல்லையென்றாலும், அது இன்னமும் ஒரு செய்தியைக் கொண்டுள்ளது - இந்தச் செய்தியானது முதல் நூற்றாண்டிற்கும் இன்றைய நாட்களுக்கும் வலிவார்ந்ததாக உள்ளது: "ஆண்டவர் ஆளுகை செய்கின்றார்! ஆண்டவரில் பலப்படுங்கள்! அவரது நோக்கம் வெற்றியடையும்!"*

***இந்த அணுகுமுறையின் பலவீனங்கள்***

*தரமுயர்ந்த அடையாளத்துவ அணுகுமுறையானது, வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டபோது இருந்த ஆவிக்குரிய மற்றும் அரசியல் ரீதியான சூழ்நிலையின்மீது வலியுறுத்தம் செய்வதில் குறைவுபடுகிறது என்பது இதன் அடிப்படை பலவீனமாக உள்ளது. இந்தப் புத்தகத்தின் அடிப்படைக் கொள்கைகளினால் நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்கு வரலாற்றுப் பின்னணியில் பழக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை; ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தை ஒருவர் வாசித்து படிக்கை யில், அது திட்டவட்டமான வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டுள்ளது என்ற முடிவில் இருந்து ஒருவர் தப்பிப்பதென்பது கடினமானதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, அதிகாரம் 17ல் உள்ள மகாவேசி என்பது, ஏழு மலை களின்மீது அமர்ந்துள்ளதான (வசனம் 9) ''பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம் பண்ணுகிற மகா நகரமேயாம்'' (வசனம் 18) என்று அடையாளப்படுத்தப் படுகிறது. இது ரோமாபுரியைக் குறிக்கும் தெளிவான குறிப்பாய் இருப்பதாகக் காணப்படுகிறது, அந்த நகரம் ஏழு மலைகளின்மீது கட்டப்பட்டுள்ளது. ஆகையால், அடையாளத்துவ அணுகுமுறையில் சில மாற்றுருவாக்கங்கள் அவசியமானவைகளாய்க் காணப்படுகின்றன.*

*ஃபிராங்க் பேக் அவர்கள் இதே முடிவை அடைந்தார் என்பது உறுதி. 1956ல் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் மீதான அவரது வகுப்பில் நான் படித்தபோது, நாங்கள் அடையாளத்துவ அணுகுமுறையின்மீதே கவனம் செலுத்தினோம். ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்பு, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் பற்றி அவர் ஒரு விளக்கவுரையை எழுதியபோது, "இந்தப் புத்தகம் தனது சொந்தக் காலகட்டத்தில் உறுதியாய் வேரூன்றியுள்ளது" என்ற தமது நம்பிக்கையை அவர் வலியுறுத்தினார் மற்றும் அவர், "முதல் நூற்றாண்டின் பின்னணியை மீண்டும் பார்க்க வேண்டியதன் அவசியத்தை" முன் நடந்தது என்ற அணுகுமுறைக்காரருடன் பகிர்ந்துகொண்டதாகக் கூறினார்.*[33]

## “ஞானத்துடன் தேர்ந்துகொள்ளுதல்” என்ற அணுகுமுறை

நான் ஐந்தாவது அணுகுமுறை ஒன்றைக் கூட்டவில்லை. மாறாக, ஒவ்வொரு அடிப்படை அணுகுமுறையும் தத்தனது பலங்கள் மற்றும் பலவீனங்களைக் கொண்டுள்ளதால், பல அணுகுமுறைகளில் இருந்து மிகச்சிறந்த அம்சங்களைத் தேர்ந்துகொள்ளுதல் என்பதே மிகச்சிறந்த செயல்முறையாக உள்ளது என்ற நிறைவான கருத்தை நான் ஏற்படுத்துகின்றேன். லியோன் மோரிஸ்[34] போன்ற அநேக தற்கால விளக்கவுரையாளர்கள் இந்த அணுகுமுறையைப் பின்பற்றியுள்ளனர்.[35] இந்தச் செயல்முறைக்கான நல்லதொரு விவரித்தலை எனக்கு மிகவும் பிரியமான விளக்கவுரைகளில் ஒன்றான, ரே சம்மர்ஸ் அவர்கள் எழுதிய *Worthy Is the Lamb* என்ற புத்தகத்தில் காணமுடியும். சம்மர்ஸ் அவர்கள் அடிப்படையில், முன்நடந்தது என்ற அணுகுமுறையை உடையவராய் இருக்கின்றார்; ஆனால் அவர் இன்றைய நாட்களுக்கான பயன்பாட்டின் அவசியத்தைக் காணுகின்றார், எனவே அவர், நிகழ்காலச் செயல்வலிவைக் கூட்டுவதற்கு அடையாளத்துவ அணுகுமுறையின் கூறுகளைப் பயன் படுத்துகின்றார். கலப்பிணைப்பான தமது அணுகுமுறையை அவர், “வரலாற்றுப் பிண்ணனி முறைமை” என்று அழைக்கின்றார்.[36] இது, “**முன்நடந்தது என்ற/**அடையாளத்துவக் கண்ணோக்கு” என்று அழைக்கப்பட முடியும் (வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அடையாளத்துவத்தைக் காட்டிலும் முன்நடந்தது என்பதற்கு அதிக வலியுறுத்தம் தருகிற ஒரு அணுகுமுறையாக உள்ளது).

நமது படிப்புகளில் நாம் பயன்படுத்தப் போகிற அணுகுமுறை என்ன? அடையாளத்துவ அணுகுமுறை எல்லா மக்களுக்கும், அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் அல்லது அவர்களின் கல்வியறிவு என்னவாக இருந்தாலும், அவர்களுக்கு அதிகமாக கருத்தை அளிக்கிறது என்று நான் நம்புகின்றேன். இருந்தபோதிலும், வரலாற்றுப்பின்னணி பற்றிய சில அறிவானது நாம் இந்தப் புத்தகத்தைப் புரிந்துகொள்வதற்கு உதவும் என்று நான் நினைக்கின்றேன். ஆகையால் நான், பின்வரும் கலப்பிணைவைக் கருத்தாகத் தெரிவிக்கின்றேன்: “**அடையாளத்துவ**/முன்நடந்தது என்ற கண்ணோக்கு” (வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், முன்நடந்தது என்பதைக் காட்டிலும் அடையாளத்துவம் என்பதற்கு அதிக வலியுறுத்தம் தருகிற முறைமை).

வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய படிப்பை நீங்கள் தொடருகையில், அனேகமாக நீங்கள் அந்தப் புத்தகத்தைக் கையாளுவதற்கு உங்கள் சொந்த வழியை மேம்படுத்தலாம். நீங்கள் அவ்வாறு செய்யும்போது, நீங்கள் அடையாளத்துவ மற்றும் முன்நடந்தது என்ற அணுகுமுறைகளின்மீது அதிகமாய்ச் சார்ந்திருந்து, எதிர்காலவியல் அணுகுமுறையைத் தவிர்த்து, தொடர் வரலாற்று ரீதியான அணுகுமுறையினால் பயன்படுத்தப்படுகிற காலம் நிர்ணயித்தல் என்பதின் அபாயங்களை உணர்ந்தறியும்படிக்கு நான் உங்களுக்கு ஆலோசனை அளிக்கின்றேன்.

அதிக புலமைத்துவம் வாய்ந்ததாக ஒலிக்கிற "ஞானமாய்த் தேர்ந்து கொள்ளுதல் என்ற அணுகுமுறைக்கு" நீங்கள் ஒரு தலைப்பை விரும்பினால், "பலவகையில் இருந்து தேர்ந்து கொள்கிற" அல்லது "முரண்களை இணைக்க முயற்சிக்கிற" போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்த முடியும், ஆனால் நான் இதனை, "சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிற" தென்று 2 தீமோத்தேயு 2:15ல் விடுக்கப்படுகிற அறைகூவலுக்குக் கீழ்ப்படிவதற்கான ஒரு உண்மையான முயற்சி என்பதாக மாத்திரம் நினைப்பதை விரும்பித் தேர்ந்து கொள்கின்றேன்.

## முடிவுரை

நீங்கள் ஒரு நண்பருடன் வெளிப்படுத்தின விசேஷம் பற்றிக் கலந்துரை யாடுவதற்கு எப்போதாவது முயற்சித்திருந்தால், முற்றிலும் செய்தித் தொடர்பு கொள்ள இயலாதிருப்பதன் அனுபவத்தினால் நீங்கள் சலிப் படைந்து இருக்கலாம். ஒவ்வொருவரும் இந்தப் புத்தகத்திற்கு மாறுபட்ட அணுகுமுறையைப் பயன்படுத்துகின்ற போது அது (சலிப்படைதல்) விளைய முடியும். இந்த சூழ்நிலையானது, "பூனை" என்பதற்குப் பயன்படும் எழுத்துக்கள் என்ன என்பதைப் பற்றி அறிய ஆங்கில அகராதியைக் கையில் வைத்துள்ள ஒரு மனிதரும், ஜெர்மன் அகராதியைக் கையில் வைத்துள்ள ஒரு மனிதரும் சேர்ந்து விவாதிப்பது போன்றதாக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப்பற்றிப் பயனுள்ள வகையில் இரு மனிதர்கள் கலந்துரையாடுவதற்கு முன்னர், அணுகுமுறை பற்றிய கேள்வியானது தீர்க்கப்பட்டாக வேண்டும். இந்தப் பாடமானது உங்களை மூழ்கடிக்கச் செய்வதாக இருக்கலாம். (இந்தப்பாடத்தை நான் எனது புதன்கிழமை மாலைவேளை வேதாகம வகுப்பில் முன்வைத்தபோது, ஒரு புதிய கிறிஸ்தவர், "டேவிட், என்னை நீங்கள் இழந்து விட்டீர்கள்!" என்று கூறினார்...) அடையாளத்துவ அணுகுமுறையை நாம் முதன்மையாகப் பயன்படுத்தப்போவது ஏன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளும் வரையிலும் இதை மீண்டும் மீண்டும் வாசியுங்கள்.

நாம் படித்துள்ள அணுகுமுறைகள் பற்றிய ஒரு நிறைவான கவனித்தல் இங்கு அவசியமாக உள்ளது: இந்த நான்கு அணுகுமுறைகளைப் பற்றிய அடிப்படை முடிவு என்பது திகைப்புக்குரிய வகையில் ஒரேமாதிரியாக உள்ளது: "எல்லாம் கூறப்பட்டு, செய்யப்பட்டு முடிந்த பின்பு, நாம் தேவனுக்கு உண்மை உள்ளவர்களாய் நிலைத்திருந்தால், நாம் வெற்றியடைவோம்." உங்கள் முழுபலத்துடன் அந்த சத்தியத்தைப் பற்றிக்கொண்டிருங்கள்!

---

குறிப்புகள்

[1]Aristotle *Politics* v. 4. [2]வெளிப்படுத்தின விசேஷம் தேவனால் ஏவுதல் பெற்றது என்பதை நம்பாதவர்கள் இந்தப் புத்தகத்திற்குத் தங்கள் சொந்த அணுகுமுறைகளைக் கொண்டுள்ளனர்: பெரும்பாலானவர்கள் இதை, முதல்

நூற்றாண்டில் துன்பங்கள் இருந்ததென்றும் அந்தக் காலத்திற்கு அப்பால் எதுவும் அற்றதாகவும் சித்தரிக்கின்றனர். சிலர், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது அறியப்படாத ஒரு எழுத்தாளரால் பிந்திய நூற்றாண்டு ஒன்றில் எழுதப்பட்டது என்று உரிமை கோருகின்றனர். இன்றைக்கான சத்தியத்தின் வாசகர்களில் பெரும்பான்மையானவர்கள் வாய்மொழி ஏவுதலில் நம்பிக்கை கொண்டுள்ளதால், நம்பிக்கையுள்ளவர்களால் பயன்படுத்தப்படும் நான்கு அணுகுமுறைகளை மாத்திரம் நாம் ஆழ்ந்து சிந்திப்போம். [3]உண்மையில், எதிர்காலவியலாளர்கள் இன்றைய நாட்களிலும்கூட, வெளிப்படுத்தின விசேஷத்தின் பெரும்பகுதியானது இன்னமும் எதிர்காலத்தில் நடைபெறவிருப்பதாக உள்ள நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறுகிறது என்று போதிக்கின்றனர். [4]மக்கள், ''இரண்டாம் வருகை'' என்ற சொற்றொடரைக் குழப்பம் உள்ளதாகக் காணுகின்றனர், ஏனெனில் வெளிப்படுத்தின விசேஷம், இந்த வாழ்வில் மனிதர்கள் மற்றும் நாடுகளுக்குத் தற்காலிகத் தண்டனையைத் தர கிறிஸ்துவின் "வருகை" என்பது பற்றி அடிக்கடி குறிப்பிடுகிறது. அவர்கள் "கிறிஸ்துவின் கடைசி வருகை" என்ற சொற்றொடரை விரும்பித் தேர்ந்து கொள்கின்றனர். இருப்பினும் "இரண்டாம் வருகை" என்ற சொற்றொடரானது நடபடிகள் 1:11ல் பேசப்பட்ட வேளையைக் குறிப்பதாக, ஏறக்குறைய உலகளாவிய வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகையால் நான் அதையே, விசுவாசமுள்ளவர்கள் வெகுமதி பெறுதல் மற்றும் துன்மார்க்கர் தண்டிக்கப்படுதல் ஆகியவை நடைபெறவிருக்கும் வேளையான கிறிஸ்துவின் கடைசி வருகையைக் குறிப்பதற்கு இந்தப் பாடத்தொடர் முழுவதிலும் பயன்படுத்துவேன். [5]ஒவ்வொரு அணுகுமுறையையும் நான் கலந்துரையாடுகையில், மாற்றுத்தலைப்புகளை நான் பட்டியலிடுவேன். இது தங்கள் வாசிப்புக்களில் இந்தச் சொற்றொடர்களைக் காணநேர்ந்துள்ளவர்களுக்கு உதவுவதற்கானதாக உள்ளது. "Eschatology" என்பது ''கடைசி விஷயங்கள் பற்றிப் படித்தல்'' என்பதாக உள்ளது. எதிர்காலவியல் அணுகுமுறையானது, வெளிப்படுத்தின விசேஷத்தின் பெரும்பான்மைப் பகுதியானது இந்தக் காலத்தின் முடிவில் நடைபெறவுள்ள விஷயங்களைப் பற்றியது என்று கூறுகிற காரணத்தினால், இது சிலவேளைகளில் "eschatological" கண்ணோட்டம் என்று அழைக்கப்படுகிறது. [6]ஆயிரமாண்டு முன் அரசாட்சிக்கொள்கையின் இந்த வகையானது ''யுகத்துவம்'' என்று அழைக்கப்பட்டுள்ளது. இன்றைய நாட்களில் உள்ள ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களில் பெரும்பான்மையானவர்கள், யுகத்துவவாதிகளாகவே உள்ளனர். [7]துன்மார்க்கருக்கு மாத்திரமே கடைசி நியாயத்தீர்ப்பு விதிக்கப்படும் என்று ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களில் சிலர் கூறுகின்றனர். [8]ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களில் சிலர், ஏழு சபைகள் என்பது சபையின் ஏழு காலங்களைக் குறிக்கிறது என்று போதிக்கின்றனர். ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களில் மற்றவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டபோது இந்த ஏழு சபைகளும் உண்மையில் நிலவியிருந்ததை - மற்றும் அவைகள் அப்பொழுதும் இப்பொழுதும் உள்ள சபைகளின் மாதிரிகளாய் உள்ளன என்பதை - ஒப்புக்கொள்கின்றனர். [9]"பரவசநிலை" என்ற வார்த்தை, இலத்தீன் மொழியில் இருந்து வந்ததாகவும், ''பிடிக்கப்பட்டிருத்தல்'' என்பதைக் குறிப்பதாகவும் உள்ளது. ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் இந்தச் சொற்றொ டரைப் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் பயன்படுத்துகின்றனர்: இயேசு தமது மக்களை "பரவசநிலைக்கு உட்படுத்துவார்" (அவர்களை மேலே கொண்டுபோவார்) என்றும், அவர்கள் அவருடன் பரவசநிலையில் இருப்பார்கள் என்றும் இவர்கள் கூறுகின்றனர். [10]C. I. Scofield, *The*

*Holy Bible: Scofield Reference Edition* (New York: Oxford, 1917; new edition, 1967). *நான் ஒவ்வொரு அணுகுமுறையைப் பற்றியும் கலந்துரையாடுகையில், அந்த அணுகுமுறையைப் பயன்படுத்திய ஆதாரமூலங்கள் சிலவற்றைப் பட்டியலிடுவேன். இது வெளிப்படுத்தின விசேஷத்தின் மற்ற எழுத்துக்களைப் படிக்க வகைபெற்றுள்ளவர்களுக்கு - பயன்படுத்தப்பட்டுள்ள மற்ற அணுகுமுறைகளை அடையாளம் காண்பதற்கு - உதவுவதாயிருக்கும்.*

[11]Hal Lindsey, *The Late Great Planet Earth* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1970). [12]Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 11. [13]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 32. [14]*இது, இயேசு சிலுவையில் மரித்திருக்கமாட்டார் - ஆனால் இயேசுவின் இரத்தம் இல்லாமல் நாம் இரட்சிக்கப்பட முடியாது! என்பதையும் மறைமுகமாய் உணர்த்துகிறது.* [15]*ஆயிரம் ஆண்டுகள் முன் அரசாட்சிக் கொள்கையைப் பற்றிய கூடுதலான தகவல்கள் இனி வெளிவரவிருக்கும் "வெளிப்படுத்தின விசேஷம் 5" என்ற புத்தகத்தில் தரப்படும். மேலும் "கடைசி விஷயங்கள்" என்ற ஓவன் ஆல்பிரிக்ட் அவர்களின் புத்தகத்தில் "மில்லேனியம், ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சி" என்ற பாடத்தையும் காணவும்.* [16]J. W. Roberts, *The Revelation to John (The Apocalypse),* The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1974), 19. [17]*இந்த அணுகுமுறையை, வரலாற்றின் தத்துவம் என்ற அணுகு முறையுடனோ அல்லது தற்கால வரலாற்றுக் கண்ணோட்டத்துடனோ குழப்பிக்கொள்ளக்கூடாது, இவைகள் இந்தப் பாடத்தில் பிற்பாடு கலந்துரையாடப்பட்ட அணுகுமுறைகளின் மாற்றுப் பெயர்களாக உள்ளன.* [18]Albert Barnes, *Notes, Explanatory and Practical, on the Book of Revelation* (London: Knight & Son, 1852); Adam Clarke, *The New Testament, vol. 2, Romans to the Revelations* (Nashville: Abingdon Press, n.d.). [19]John T. Hinds, *A Commentary on the Book of Revelation*, New Testament Commentaries (Nashville: N.p., 1937; reprint, Nashville: Gospel Advocate Co., 1973). [20]*இந்த அணுகுமுறையானது புரொட்டஸ்டன்டுகளால் பெருமளவு பயன்படுத்தப்பட்டிருந்தாலும், கத்தோலிக்கத்தின் சில விளக்கவுரைகள், புரொட்டஸ்டன்டு சீர்திருத்தம்தான் வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள "மிருகம்" என்று "நிரூபிப்பதற்கு" இதைப் பயன்படுத்தியுள்ளன!*

[21]*"ஒருநாள் = ஒரு ஆண்டு" என்ற கருத்தானது ஒரு சில வசனப்பகுதிகளில் மாத்திரம் கண்டறியப்பட முடியும், ஆனால் இக்கருத்தானது பெரும்பாலான தீர்க்கதரிசன இலக்கியத்தில் இருப்பதில்லை. (உதாரணமாக, ஏசாயா 7:8; எரேமியா 29:10; தானியேல் 9:24; மத்தேயு 20:19 ஆகியவற்றைக் காணவும்.) இந்தக் கருத்தை வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கு நடைமுறைப் படுத்த இயலும் என்பதை இந்தப் புத்தகத்தில் எதுவும் சுட்டிக்காண்பிப்பதில்லை. ("ஒரு நாள் = ஒரு ஆண்டு" என்றிருக்குமென்றால், வெளிப்படுத்தின விசேஷம் 20:4 வசனப் பகுதியானது, கிறிஸ்து 360,000 ஆண்டுகள் ஆளுகை செய்வார் என்று அர்த்தப்படுமே!) மற்றும், இப்படிப்பட்ட கருத்தானது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற பொதுவான சுட்டிக்காண்பித்தல் எதுவும் இறைவெளிப்பாட்டு இலக்கியத்தில் இல்லை. இறைவெளிப்பாட்டு இலக்கியத்தில் எண்களின் பொதுவான பயன்பாடு பற்றி இந்தப் புத்தகத்தின் அடுத்த பாடத்தில் கலந்துரையாடப்படும்.* [22]*இந்தப் புத்தகத்தில் இனிவரும் விளக்கவுரைகளில் காணவும்.* [23]Summers, 38. [24]*மற்ற அணுகுமுறைகளில் பயன்படுத்தாத இலத்தீன் வார்த்தையைக் கல்வியாளர்கள் இவ்விடத்தில் ஏன் பயன்படுத்துகின்றனர் என்பது பற்றி உங்களுக்கு நான் எதுவும் கூற இயலாது; இப்படிப்பட்டவைகள் கல்விப்புலமையின் தனித்தன்மையாக உள்ளன.* [25]Foy E. Wallace Jr., *The Book of Rev-*

*elation* (Fort Worth, Tex.: Foy E. Wallace Jr. Publications, 1966). [26]*கி.பி. 70ல் எருசலேம் அழிக்கப்பட்டபோது, இரண்டாம் வருகை நடைபெற்றது என்பதே "கி.பி. 70 கோட்பாட்டின்" இருதயம்போன்ற மையப்பகுதியாக உள்ளது. இந்தத் தவறான உபதேசத்தைப் பற்றிய கலந்துரையாடல் ஒன்று* W. Terry Varner, *Studies in Biblical Eschatology,* vol. 1 (Marietta, Ohio: Therefore Stand Publications, 1981) *என்ற புத்தகத்தில் காணப்படுகிறது.* [27]Roberts, 16. [28]Harold Hazelip, *The Lord Reigns: A Survey of the Book of Revelation* (Abilene, Tex.: Herald of Truth, n.d.), iv. [29]*முன்நடந்தது என்ற கொள்கை கொண்டிருப்பதாக உரிமை கோருபவர்களில் பெரும்பான்மையானவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய தங்கள் அணுகுமுறையைச் சற்றே மாற்றியமைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக, இவர்களில் பெரும்பான்மையானவர்கள், இந்தப் புத்தகத்தின் கடைசி சில அதிகாரங்கள் நியாயத்தீர்ப்பு நாள் பற்றியும் நித்தியம் பற்றியும் பேசுகின்றன என்று நம்புகின்றனர். அந்த அளவுக்கு, அவர்கள் "கண்டிப்பான" முன்நடந்தது என்ற கொள்கையாளர் களாய் இருப்பதில்லை.* [30]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954).


[31]*ஹென்ரிக்ஸென் அவர்கள் அடையாளத்துவ முறைமையைப் பின்பற்றினார் என்பதற்கான நிரூபணத்திற்கு, அவரது புத்தகத்தில் பக்கம் 56ல் அவரது முன்மொழிவு எண் 6ஐக் காணவும்.* [32]*ஹென்ரிக்ஸென் அவர்களின் புத்தகத்தில், ஆறாம் அதிகாரத்திற்கான தலைப்பு, ''உடன் நிகழ்வு சூழ்நிலைகளில் வேர்கொண்டுள்ள இறைவெளிப்பாடு'' என்று தொடங்குகிறது.* [33]Frank Pack, *Revelation*, Part 1, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 16. [34]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987). [35]*ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஹென்ரிக்ஸென், பேக் மற்றும் இராபர்ட்ஸ் ஆகியோர் பல அணுகுமுறைகளை ஒன்றிணைத்தனர்.* [36]Summers, 45. *இதே அணுகுமுறைக்கு ''வரலாற்று - தீர்க்கதரிசனரீதியான அணுகுமுறை'' என்ற இன்னொரு சொற்றொடரும் பயன்படுத்தப்படுகிறது.*

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *இந்தப் பாடத்தின் முதல் பகுதியில் தரப்பட்டுள்ளபடி, வெளிப் படுத்தின விசேஷம் புத்தகத்தை விளக்கப்படுத்துவதற்கு அத்தியாவசியமான இரண்டு திறவுகோல்கள் யாவை?*
2. *இந்தப் பாடத்தின்படி, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கு அடிப்படை அணுகுமுறைகள் எத்தனை உள்ளன?*
3. *நாம் படித்த முதலாவது அணுகுமுறை என்ன? அதை வரையறுக்கவும்.*
4. *இந்த அணுகுமுறையின் எந்த மாறுபாடு பல ஆண்டுகளாக அதிகம் பிரபலமாயிருந்தது? அந்த வார்த்தையை வரையறுக்கவும்.*
5. *முதல் அணுகுமுறையின் ''பலங்கள்'' மற்றும் பலவீனங்கள் ஆகியவற்றைப் பட்டியலிடவும்.*
6. *நாம் படித்த இரண்டாம் அணுகுமுறை என்ன? அதை வரையறுக்க*

*வும்.*

7. *இரண்டாம் அணுகுமுறையின் பலங்கள் மற்றும் பலவீனங்கள் சிலவற்றைப் பட்டியலிடவும்.*
8. *நாம் படித்த மூன்றாம் அணுகுமுறை என்ன? அதை வரையறுக்கவும்.*
9. *மூன்றாம் அணுகுமுறையின் பலங்கள் மற்றும் பலவீனங்கள் சிலவற்றைப் பட்டியலிடவும்.*
10. *நாம் படித்த நான்காம் அணுகுமுறை என்ன? அதை வரையறுக்கவும்.*
11. *நான்காம் அணுகுமுறைக்கான மற்ற சில குறிப்புப் பெயர்கள் யாவை?*
12. *நான்காம் அணுகுமுறையின் பலங்கள் மற்றும் பலவீனங்கள் சில வற்றைப் பட்டியலிடவும்.*
13. *நான்காம் அணுகுமுறையானது விபரங்களைப் பற்றியா அல்லது முழுமையான சித்தரிப்பைப் பற்றியா, எதைப் பற்றி அக்கறையுள்ளதாக இருக்கிறது?*
14. *இந்தப் பாடத்தொடரில் நாம் பயன்படுத்தவிருக்கும் அணுகு முறைகளின் இணைவு என்ன?*




*ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் அனேகரால் முன்மொழியப்பட்ட
வெளிப்படுத்தின விசேஷத்தின் ஒரு வரைக்குறிப்பு*